**STARTING TIME 11.26 A.M**

**IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.**

**O.S. No. 11/2025**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff solemnly affirmed by Tr. R. Suresh Babu, Grade-III Bench Clerk of this court, on 07.08.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : **கிருஷ்ணா ரெட்டி** Father's Name : Narayanasamy Reddy

Address : 36, Vinayagar Koil Street, Panavattampadi Village,
Nemili Taluk, Ranipet Distrit.

Age :73

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

3. தாவா சொத்துக்கள் எத்தனை அயிட்டங்களாக சொல்லப்பட்டுள்ளது என்று கடந்த முறை குறுக்கு விசாரணை செய்த போது கேள்வி கேட்டதால் அது பற்றி தெரிந்துக் கொண்டேனா என்றால், தாவா பி-அட்டவணை சொத்தை பொறுத்து தான் தகராறு உள்ளது. தாவா பி-அட்டவணை சொத்தில் சர்வே எண் 502/1 என்று தான் சொல்லியுள்ளேனா என்றால், ஆமாம்.

4. சர்வே எண் 502-ன் மொத்த விஸ்தீரணம் என்னவென்றால் 48 செண்ட் ஆகும். அதில் 35 செண்ட் சொத்தை ஆதிமூலம் என்பவரிடமிருந்து எனது தகப்பனார் கிரயம் வாங்கியதாக தாவாவில் சொல்லியுள்ளேன் என்றால், சரிதான். எனது தகப்பனாருடன் உடன்பிறந்தவர்கள்

மொத்தம் எத்தனை பேர் என்றால், மொத்தம் 4 பேர், அவர்கள் பெயர் ஏழுமலை ரெட்டி, ஆதிமூலம் ரெட்டி, முருகேச ரெட்டி, எனது தகப்பனார் நாராயணசாமி ரெட்டி ஆகும்.

5. எனது தகப்பனாருக்கு 35 செண்ட் சொத்தை கிரயம் செய்த ஆதிமூல ரெட்டிக்கு அந்த சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால், அது பற்றி தெரியாது. எனது தகப்பனார் கிரயம் பெற்ற வா.சா.ஆ.1 கிரயப் பத்திரத்தில், ஆதிமூலத்திற்கு சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால், இல்லை.

6. நான் வா.சா.ஆ.1 கிரயப் பத்திரத்தின் அசலை தாக்கல் செய்யாமல், சான்றிட்ட நகலை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான், அசலை தேடிப்பார்த்தும் கிடைக்கவில்லை அதனால் சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளேன், அந்த ஆவணத்தில் எனது பெரியப்பா முருகேச ரெட்டியும், போடி நாயுடு என்பவரும் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்கள். வா.சா.ஆ.1 கிரயப் பத்திரத்தின் அசலை தாக்கல் செய்தால் தான், அதில் யார் சாட்சி கையெழுத்து செய்தார்கள் என்ற விவரம் தெரியும் என்றால், சரிதான்.

7. வா.சா.ஆ.1 கிரயப் பத்திரத்தில் சாட்சியாக கையெழுத்து செய்துள்ள முருகேச ரெட்டி என்பவரின் தகப்பனார் பெயரே இல்லை என்றால், சரியல்ல, உள்ளது. மேற்படி இருவரை தவிர அந்த ஆவணத்தில் வேறு யாரும் சாட்சி கையெழுத்து செய்துள்ளார்களா என்றால், இல்லை. வா.சா.ஆ.1 கிரயப் பத்திரத்தை எழுதிக் கொடுத்த ஆதிமூல ரெட்டிக்கு அந்த கிரய சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதற்கு வேறு ஆவணம் எதுவும் இல்லை என்றால், அது பற்றி எனக்கு தெரியவில்லை.

8. வா.சா.ஆ.1 கிரயப் பத்திரத்தின் மூலம், சர்வே எண் 502-ல் உள்ள 48 செண்டில் 35 செண்ட் சொத்தை எனது தகப்பனார் கிரயம் பெற்றதாக சொல்கிறேன் என்றால், சரிதான். 48

செண்டில் எனது தகப்பனார் கிரயம் பெற்ற 35 செண்ட் சொத்திற்கு சக்குபந்தி என்னவென்றால், முருகேசன் நிலத்திற்கும் தெற்கிலும், எனது தகப்பனார் 501/19-ல் கிரயம் பெற்ற நிலத்திற்கு வடக்கிலும், தப்பூர் எல்லைக்கு மேற்கிலும், முனியப்ப ரெட்டி நிலத்திற்கு கிழக்கிலும் உள்ளது. எனவே, 48 செண்டில் என் தகப்பனார் கிரயம் பெற்ற 35 செண்ட் நிலம் தெற்கில் உள்ளதாக சொல்கிறேன் என்றால், சரிதான்.

9. எங்கள் நிலத்திற்கு வடக்கில் இருப்பது முருகேசன் நிலமா என்றால், முருகேச வகையறாவின் நிலமாகும். முருகேச வகையறாவிற்கு 13 செண்ட் நிலம் மட்டும் தான் சொந்தம் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

10. வா.சா.ஆ.1 கிரயப் பத்திரத்தில் உள்ள சொத்தின் மேற்கு சக்குபந்தியில் சொல்லப்பட்டுள்ள முனியப்ப ரெட்டி என்பவர் 1, 2 பிரதிவாதிகளின் தாத்தா என்றால், சரிதான். எங்களுக்கும், 1, 2 பிரதிவாதிகள் மற்றும் வகையறாவினருக்கும் இடையே அரக்கோணம் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 122/2020 என்ற எண்ணில் ஒரு வழக்கு நடைபெற்று வருகிறது என்றால், சரிதான். அந்த வழக்கு சொத்தின் சர்வே எண் 501/14D என்றால், சரிதான். அந்த வழக்கு சொத்து அவர்களுக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளார்கள் என்றால், அது பற்றி தெரியாது. அந்த வழக்கில் அவர்கள் தாக்கல் செய்த ஆவணங்கள் பற்றி தெரிந்துக் கொண்டேனா என்றால், தெரிந்துக் கொண்டேன்.

1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின்பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

**ENDING TIME: 11.50. A.M.**

**(Sd/-. G. Yuvaraj)**

**Special Subordinate Judge,**
**Special Sub court for L.A.O.P. Cases,**
**Arakkonam.**